


கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் மாராத்தான் போட்டியை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். அருகில் தாம்பரம் மாநகர துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், மாநில அணிகளின் துணைச் செயலாளர்கள் அ.தமிழ்மாறன், சாய் ஜெயகாந்த பாரதி, ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாமன்ற உறுப்பினர் பூங்கொடி ஜெகதீஸ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




அனைத்திந்திய கிறிஸ்துவ கூட்டமைப்பு சார்பில் சென்னை, மூலக்கொத்தளம் அருகில் கிறிஸ்துமஸ் கேரல் நிகழ்ச்சி நடைபெற்றது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்று கிறிஸ்துமஸ் விழாவை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார் உடன் பிஷப் டி.மோகன்தாஸ், ரவிச்சந்திரன், பேராயர் சாமுவேல், பால் தினகரன், வழக்கறிஞர் பெ.வினோத் உடன் இருந்தனர்.

### 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# கடலூர் மேற்கு மாவட்டத்தில் 13 ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, துணை முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதல் படி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திட்டக்குடி விருத்தாசலம் நெய்வேலி பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கட்சிகளின் சார்பில் வருகிற 24.12.2025 புதன்கிழமை, காலை 10 மணியளவில் கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா..க அரசையும். அ.தி.மு.க வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| ஊராட்சி ஒன்றியம் | கண்டன ஆர்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|
| **திட்டக்குடி சட்டமன்ற தொகுதி** | |
| மங்களூர் தெற்கு ஒன்றியம் | தேரடி வீதி -மங்களூர் |
| மங்களூர் வடக்கு ஒன்றியம் | ஆவட்டி கூட்டு சாலை கல்லூர் |
| மங்களூர் கிழக்கு ஒன்றியம் | ஆவினங்குடி ஊராட்சி |
| நல்லூர் தெற்கு ஒன்றியம் | கொடிக்கலம் ஊராட்சி |
| **விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி** | |
| நல்லூர் வடக்கு ஒன்றியம் | வேப்பூர் கூட்டு சாலை |
| விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் | பரவளூர் ஊராட்சி |
| விருத்தாசலம் தெற்கு ஒன்றியம் | கருவேப்பில குறிச்சி பேருந்து நிலையம் |
| கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம் | மணக்கொல்லை ஊராட்சி |
| கம்மாபுரம் மேற்கு ஒன்றியம் | கோட்டேரி ஊராட்சி |
| **நெய்வேலி சட்டமன்ற தொகுதி** | |
| பண்ருட்டி தெற்கு ஒன்றியம் | காடாம்புலியூர் பேருந்து நிலையம் |
| குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம் | சத்திரம் நான்கு முனை சந்திப்பு |
| **பண்ருட்டி சட்டமன்ற தொகுதி** | |
| அண்ணாகிராமம் கிழக்கு மேற்கு ஒன்றியம் | அம்பேத்கர் சிலை அருகில் அண்ணாகிராமம் |
| பண்ருட்டி வடக்கு ஒன்றியம் | அங்குசெட்டிப்பாளையம் பேருந்து நிலையம். |

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை அந்தந்த ஒன்றியங்களின் கழகச் செயலாளர்கள் இணைந்து நடத்திட வேண்டும்.

அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு, நம்முடைய கழக நிர்வாகிகளுக்கு, கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு தந்து அனைவரையும் இக்கண்டன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

### 100 நாள் வேலைத்திட்டத்தை அழித்து ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் 7 ஒன்றியங்களில் - மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் - ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



100 நாள் வேலைத்திட்டத்தை அழித்து ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பாஜக அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை வருகிற (24.12.2025) புதன்கிழமை அன்று காலை நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள 7 ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா.ஜ.க அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| வ. எண் | நேரம் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | தலைமை | முன்னிலை |
|---|---|---|---|---|
| 1 | 9:30 மணி | உத்திரமேரூர் | க.சுந்தர் எம்.எல்.ஏ. மாவட்டச்செயலாளர் | ஜி.ஞானசேகரன், டி.குமார், எஸ்.ஆர்.அப்பாதுரை, என்.எஸ்.பாரிவள்ளல் |
| 2 | 10:30 மணி | வாலாஜாபாத் | க.சுந்தர் எம்.எல்.ஏ மாவட்டச்செயலாளர் | பி.சேகர், பி.எம்.பாபு, என்.பாண்டியன், எழிலரசி சுந்தரமூர்த்தி |
| 3 | 11:30 மணி | காஞ்சிபுரம் | க.சுந்தர் எம்.எல்.ஏ மாவட்டச்செயலாளர் | சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, பி.எம்.குமார், கே.எம்.ஆர்.குமணன், எம்.எஸ்.சுகுமார் |
| 4 | 9:30 மணி | மதுராந்தகம் | க.செல்வம் எம்.பி. | பி.எச்.சத்தியசாய், பொன் சிவகுமார், கே.குமார் |
| 5 | 10:30 மணி | அச்சிறுப்பாக்கம் | க.செல்வம் எம்.பி | கே.கண்ணன், ஜி.தம்பு, டி.வி.கே.கோகுலகண்ணன், டி.ஆர்.நாராயணன், வி.டி.ஆர்.வி.எழிலரசன் |
| 6 | 11:30 மணி | சித்தாமூர் | க.செல்வம் எம்.பி | வி.ஏழுமலை. இ.சிற்றரசு. |
| 7 | 12:30 மணி | லத்தூர் | க.செல்வம் எம்.பி | ஆர்.கார்த்தி, எம்.எஸ்.பாபு, வெளிக்காடு ஏழுமலை, எஸ்.கே.ராஜேந்திரன் |

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை அந்தந்த ஒன்றியங்களின் கழகச் செயலாளர்கள், அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்துப் பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு அவர்களுடன் இணைந்து நடத்திட வேண்டும். நம்முடைய கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

### எழும்பூர் வடக்குப் பகுதி 77 ‘அ’ வட்டக் –

# கழக முன்னோடி கே.சுப்பராயன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



*சென்னை, டிச.22- சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்கு பகுதி 77அ வட்டம் பி.கே. காலனியை சேர்ந்த வட்ட கழக செயற்குழு உறுப்பினர் உடையார் பாளையம் வேலாயுத நினைவு மன்ற செயலாளரும் கழகம் அளித்த மூத்த முன்னோடி பொற்கிழி பெற்றவரும் பல்வேறு கழகப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவருமான கே.சுப்பராயன் அவர்கள் (வயது 82) (20.12.2025) சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு மேல் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இச்செய்தி அறிந்து கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

*அவரது உடல் நேற்று (21.12.2025, ஞாயிற்றுக்கிழமை) மதியம் 2.30 மணியளவில் நெ.23, அப்பு தெரு, வியாசர்பாடி, சென்னை அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு மூலகொத்தளம் சுடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*



மாதவரம் தொகுதி 30 (அ) வட்டத்தில் பாகம் 124.125. இல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டம் பகுதி செயலாளர் ஜி.துக்காராம் தலைமையில் நடைபெற்றது.இதில் வட்ட செயலாளர் டி. சுந்தரம், இ ராமன், எஸ்பி கண்ணன், பி வி ராஜு, சி பரமேஸ்வரி. ,உமா மகேஸ்வரி, அபிப்பிரகுமான், விக்னேஷ், வெற்றிவேல், எஸ் சி என் ராஜி, ஏ வி முருகன், எம் சீனிவாசன், எல் லட்சுமணன், கே நரேந்திரன், சாய்ரா பானு ,மீனம்மாள் டிவிஎஸ் கோபி, வி பாஸ்கர், நாராயணன், கௌரி ரவிசங்கர், பூபதி ,டிவி ராஜு ,பி. விக்னேஷ், தீப மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ‘என் வாக்குச்சாவடி வெற்றிவாக்குச் சாவடி’!

## வட்டச் செயலாளர் கே.எஸ். தினேஷ் பிரபு அறிக்கை!

*சென்னை,டிச.22- ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 110 வது வட்ட செயலாளர் கே எஸ் தினேஷ் பிரபு அறிக்கை வருமாறு*

*மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் அமைந்துள்ள 110 வது வட்டத்திற்கு உட்பட்ட B L A 2 மற்றும் BLC,BDA,BYO ஆகியோருக்கு பாகவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி 110 வது வட்டத்தில் 51,52,53,54,55 ஆகிய பாகங்களுக்கான கூட்டம் 110 வது வட்ட செயலாளர் கே தினேஷ் பிரபு தலைமையில் இன்று 22.12.2025 திங்கள் கிழமை மாலை 6.00 அளவில் 20/32காம்தார் நகர் முதல் தெரு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற உள்ளது இந்த கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா எழிலன் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் தேர்தல் பொறுப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள்.*

*எனவே 110 வது வட்டத்தில் உள்ள BLA2, BLC, BDA, BYO, கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு 110 வது வட்டக் கழகச் செயலாளர் கே எஸ் தினேஷ் பிரபு அறிக்கை விடுத்துள்ளார்.*




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி கருங்குழி பேரூர் திமுக சார்பாக வாக்குச்சாவடி பரப்புரை மற்றும் பாக முகவர்கள் நிலைக்கு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் பூத் எண் 61 ஏரி நகர் பகுதியில் கருங்குழி பேரூர் கழக செயலாளர் ஆ.சுந்தரமூர்த்தி தலைமையில், நடைபெற்றது. இதில் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர் சாரதி மணிமாறன் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் இதில் வார்டு கிளை கழக செயலாளர்கள் எம்.நந்தகுமார், எம்.கார்த்திக், எஸ்.சீனிவாசன், கருங்குழி பேரூராட்சி மன்றத் தலைவர் , பேரூர் துணை செயலாளர் டி.ஜி.எஸ்.தசரதன் மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் வே.பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.